### கரூர் மாவட்டக் கழகம் சார்பில்

# பகுதி, ஒன்றிய, நகர, பேரூர்க் கழகங்கள் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க 2026 ஆம் ஆண்டு சட்டமன்ற பொதுத்தேர்தலில் 200க்கும் அதிகமான இடங்களை வெற்றிபெற வேண்டும் என்ற இலக்கை நோக்கி, கரூர் மாவட்டக் கழகம், மாவட்டத்திற்குட்பட்ட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி அந்தந்த பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக அவைத்தலைவர்கள் தலைமையிலும் பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் மாநில, மாவட்ட, முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் வட்ட, வார்டு, கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக பொது உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம்.

| வ. எண் | தேதி / நேரம் | கழக அமைப்பு | இடம் |
|---|---|---|---|
| 1. | 12.09.2024 மாலை 5.00 மணி | உப்பிடமங்கலம் பேரூர் | TVR திருமண மண்டபம், உப்பிடமங்கலம். |
| 2. | 13.09.2024 காலை 9.00 மணி | பள்ளப்பட்டி நகரம் | சூல்த்தர் அபிபுல்லா நியூ ஹால், பள்ளப்பட்டி. |
| 3. | 13.09.2024 காலை 9.00 மணி | தாந்தோணி கிழக்கு ஒன்றியம் | S.K.T. திருமண மண்டபம், மணவாடி |
| 4. | 13.09.2024 காலை 10.00 மணி | கரூர் மேற்கு பகுதி | V.K.D. மஹால், தாந்தோனிமலை. |
| 5. | 13.09.2024 காலை 10.00 மணி | கரூர் தெற்கு பகுதி | V.N.C. மஹால், காந்திகிராமம். |
| 6. | 13.09.2024 காலை 10.00 மணி | அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றியம் | சங்கம் மஹால், மலைக்கோவிலூர். |
| 7. | 13.09.2024 காலை 10.00 மணி | பழைய ஜெயங்கொண்டம் பேரூர் | பாம்பாலம்மன் மண்டபம், லட்சுமணம்பட்டி. |
| 8. | 13.09.2024 காலை 10.00 மணி | குளித்தலை நகரம் | மீனாட்சி மண்டபம், அக்ரஹாரம், குளித்தலை |
| 9. | 13.09.2024 காலை 11.00 மணி | அரவக்குறிச்சி மேற்கு ஒன்றியம் | A.S.மஹால், சௌந்திராபுரம். |
| 10. | 13.09.2024 காலை 11.00 மணி | கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம் | வெங்கடேஷ்வரா மண்டபம், மாயனூர். |
| 11. | 13.09.2024 மதியம் 12.00 மணி | அரவக்குறிச்சி பேரூர் | M.S. மஹால், அரவக்குறிச்சி. |
| 12. | 13.09.2024 மதியம் 12.00 மணி | கிருஷ்ணராயபுரம் பேரூர் | P.S. மஹால், கிருஷ்ணராயபுரம். |
| 13. | 13.09.2024 மாலை 4.00 மணி | குளித்தலை மேற்கு ஒன்றியம் | S.N.S. மண்டபம், இராஜேந்திரம். |
| 14. | 13.09.2024 மாலை 5.00 மணி | கரூர் மேற்கு ஒன்றியம் | கலைஞர் திடல் சேமங்கி. |
| 15. | 13.09.2024 மாலை 5.00 மணி | கரூர் வடக்கு ஒன்றியம் | மகாலட்சுமி மண்டபம், வாங்கல் |
| 16. | 13.09.2024 மாலை 6.00 மணி | கரூர் மத்திய கிழக்கு பகுதி | DP மஹால், பசுபதிபாளையம். |
| 17. | 13.09.2024 மாலை 6.00 மணி | க.பரமத்தி தெற்கு ஒன்றியம் | V.K.D மண்டபம், எல்லமேடு. |
| 18. | 13.09.2024 மாலை 6.00 மணி | கடவூர் தெற்கு ஒன்றியம் | அய்யனார் திருமண மண்டபம், பாலவிடுதி. |
| 19. | 13.09.2024 மாலை 6.00 மணி | நங்கவரம் பேரூர் | நங்கவரம். சாத்தாண்டி அம்மன் கோவில் அருகில், |
| 20. | 13.09.2024 இரவு 7.00 மணி | க.பரமத்தி மேற்கு ஒன்றியம் | ஒன்றிய கழக அலவலகம், தென்னிலை. |
| 21. | 13.09.2024 மாலை 7.00 மணி | கரூர் மத்திய பகுதி | காவேரி அம்மாள் திருமண மண்டபம், உழவர் சந்தை அருகில். |
| 22. | 13.09.2024 இரவு 7.00 மணி | கரூர் மத்திய மேற்கு பகுதி | S.K.T மஹால், வேலுச்சாமிபுரம். |
| 23. | 14.09.2024 காலை 10.00 மணி | கிருஷ்ணராயபுரம் கிழக்கு ஒன்றியம் | தனம் திருமண மண்டபம், வேங்காம்பட்டி |
| 24. | 14.09.2024 காலை 11.00 மணி | கிருஷ்ணராயபுரம் தெற்கு ஒன்றியம் | கலைஞர் திடல், கிழக்கு களம், பஞ்சப்பட்டி |
| 25. | 14.09.2024 மதியம் 12.00 மணி | கடவூர் மேற்கு ஒன்றியம் | வசந்தம் மஹால், சிந்தாமணிப்பட்டி |
| 26. | 14.09.2024 மதியம் 1.00 மணி | தாந்தோணி மேற்கு ஒன்றியம் | ஒன்றிய கழக அலுவலகம், ரெட்டிபாளையம் |
| 27. | 14.09.2024 மாலை 6.00 மணி | கரூர் கிழக்கு ஒன்றியம் | ராசி முருகன் மண்டபம், வெண்ணமலை. |
| 28. | 15.09.2024 காலை 10.00 மணி | கரூர் வடக்கு பகுதி | பகுதி கழக அலுவலகம், வெங்கமேடு. |
| 29. | 15.09.2024 காலை 10.00 மணி | புலியூர் பேரூர் | கலைஞர் திடல், காளிபாளையம், புலியூர். |
| 30. | 15.09.2024 மாலை 4.00 மணி | குளித்தலை கிழக்கு ஒன்றியம் | கணபதி நகர் கார்டன், அய்யர்மலை. |
| 31. | 15.09.2024 மாலை 5.00 மணி | புஞ்சை தோட்டக்குறிச்சி பேரூர் | மலையம்மன் மண்டபம், தளவாபாளையம். |
| 32. | 15.09.2024 மாலை 5.00 மணி | மருதூர் பேரூர் | S.N.S. மண்டபம், இராஜேந்திரம். |
| 33. | 15.09.2024 மாலை 6.00 மணி | புகழூர் நகரம் | புகழி திருமண மண்டபம், வேலாயுதம்பாளையம். |
| 34. | 15.09.2024 இரவு 7.00 மணி | க.பரமத்தி வடக்கு ஒன்றியம் | ஒன்றிய கழக அலுவலகம், க.பரமத்தி |
| 35. | 16.09.2024 காலை 10.00 மணி | கடவூர் வடக்கு ஒன்றியம் | ஒன்றிய கழக அலுவலகம், தளபதி அரங்கம், காணியாளம்பட்டி |
| 36. | 16.09.2024 மாலை 4.00 மணி | தோகைமலை மேற்கு ஒன்றியம் | கண்ணாயி காமாட்சி மண்படம், தோகைமலை. |
| 37. | 16.09.2024 மாலை 5.00 மணி | தோகைமலை கிழக்கு ஒன்றியம் | அன்பு மண்டபம், காவல்காரன்பட்டி |

இவண்
கரூர் மாவட்ட தி.மு.க.



புதுக்கோட்டை மாவட்டம், திருக்கோகர்ணம், அய்யனார் திடலில், வேளாண்மைப் பொறியியல் துறையின் சார்பில், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பராமரிப்பு தொடர்பான மாவட்ட அளவிலான முகாமினை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, தலைமையில் 12.09.2024 அன்று துவக்கி வைத்து பார்வையிட்டார். உடன் புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில் அவர்கள், செயற்பொறியாளர் (வே.பொ.) எஸ்.குமாரகணேஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




திருப்பூர் மாநகராட்சி, வித்யா கார்த்திக் திருமண மண்டபத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்புக்கான காசோலைகளை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாவட்டக் கழக செயலாளர்கள், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் திருப்பூர் வடக்கு, 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் திருப்பூர் தெற்கு, , கே.ஈ.பிரகாஷ், மாநகர செயலாளர்கள் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், டி.கே.டி மு.நாகராசன். பவன்குமார். ஜி.கிரியப்பனவர், சாம்சாந்தகுமார், சி.கோவிந்தசாமி, தம்பி ஆர்.கோவிந்தராஜ், வெ.உமா மகேஸ்வரி, செ.உமா மகேஸ்வரி, வழக்கறிஞர் எஸ்.குமார், ஈ.தங்கராஜ், ப.கலைச்செல்வி , ஆனந்தி உள்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கே.கே.செல்லப் பாண்டியன் - எம்.எம்.அப்துல்லா எம்.பி. - டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு! புதுக்கோட்டையில்

# அனைத்துத்துறை சார்ந்த பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி – சிவ.வீ.மெய்யநாதன் தலைமையில் நடைபெற்றது!

புதுக்கோட்டை, செப்.14-

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், அனைத்துத் துறை சார்ந்த பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் ஆகியோர் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மு. அருணா முன்னிலையில் 10.09.2024 அன்று நடை பெற்றது.

பின்னர் அமைச்சர் எஸ். ரகுபதி தெரிவித்ததாவது :-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏழை, எளிய பொதுமக்கள் நல்வாழ்வு வாழ்ந்திடும் வகையில் பல்வேறு சிறப்பான திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, கூட்டுறவுத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளின் மூலம் பொது மக்களின் குடிநீர் வசதி, சாலை வசதி, மின் வசதி, சுகாதார வசதி உள்ளிட்ட அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதன்படி அனைத்துத் துறை சார்ந்த பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், முதல்வரின் முகவரி துறையின்கீழ் மக்களுடன் முதல்வர் திட்டம் குறித்தும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் ஊரக வளர்ச்சி, மகளிர் திட்டம், 15வது நிதிக்குழு மான்யம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் குறித்தும், புதுக்கோட்டை மாநகராட்சி மற்றும் அறந்தாங்கி நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறையின்கீழ் முதியோர் உதவித் தொகை, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, இணையவழி பட்டா மாறுதல், இலவச வீட்டுமனைப் பட்டா குறித்தும், பள்ளிக் கல்வித் துறையின்கீழ் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின்கீழ் தேசிய தொழுநோய் தடுப்பு திட்டம், மருத்துவ மற்றும் ஓமியோபதி குறித்தும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைகீழ் புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் குறித்தும், வேளாண்மை உழவர் நலத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கூட்டுறவுத்துறை, தாட்கோ, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடம் மேம்பாட்டு வாரியம், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் ஆகிய துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்தும், வனத்துறையின்கீழ் பசுமைப்பள்ளி திட்டம் குறித்தும் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணி முன்னேற்றம் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் இத்திட்டங்கள் மூலம் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் விரைவாகவும் மற்றும் உரிய முறையில் திட்டங்களைக் கொண்டு சேர்த்திட தொடர்புடைய அனைத்து அரசு அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற உன்னத நோக்கத்தில் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் பொதுமக்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் எண்ணற்ற திட் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அதன்படி அனைத்துத் துறை சார்ந்த பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை, பள்ளிக்கல்வித் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, வேளாண்மை உழவர் நலத் துறை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

எனவே அனைத்துத் துறை அரசு அலுவலர்களும் தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் நலத்திட்டங்களை பொதுமக்களிடம் கொண்டு சேர்த்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் முன்னாள்” அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திலகவதி செந்தில் , புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா , மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ. ராஜராஜன், தனி மாவட்ட வருவாய் அலுவலர் (காவிரிவைகை குண்டாறு) ஆர். ரம்யாதேவி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ஜெயலட்சுமி தமிழ்செல்வன், மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முருகேசன், வருவாய் கோட்டாட்சியர்கள் பா.ஐஸ்வர்யா (புதுக்கோட்டை), ச.சிவக்குமார் (அறந்தாங்கி), தெய்வநாயகி (இலுப்பூர்), அறங்காவலர் குழுத் தலைவர் தவ. பாஞ்சாலன், எம்.எம். பாலு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

### கழகப் பொதுக்குழு உறுப்பினர்

# கெங்கவல்லி சேக் மொய்தீன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப்.14–

கழகப் பொதுக்குழு உறுப்பினரும் கெங்கவல்லி முன்னாள் பேரூர் கழகச் செயலாளருமான சேக் மொய்தீன் அவர்கள் நேற்று முன்தினம் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

இச்செய்தியறிந்ததும் கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது ஆழ்ந்த இரங்கலை மறைந்த சேக் மொய்தீன் குடும்பத்தாருக்குத் தெரிவித்துள்ளார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள் நியமிக்க நேர்காணல் கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் நடைபெற்ற மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜெயந்திரன் வரவேற்புரை ஆற்றினார். நேர்காணலில் மாநில மாணவரணி இணை செயலாளர் ஜெரால்டு, மாநில துணை செயலாளர் வீரமணி, மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி , சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப், கிருபாகரன், செந்தில், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், பாலன், நாகராசன், கோதண்டன், கிருஷ்ணகிரி நகரக் கழக செயலாளர் நவாப், மாணவரணி துணை அமைப்பாளர்கள் ராமச்சந்திரன் , ஹரிகரன், மணிபாரதி, உமாவதி, கௌதம் உள்ளிட்ட ஏராளமானோர் படத்தில் உள்ளனர்.